ஈழப்பிரச்சனைக்குத் தீர்வு!

# இந்தியா இலங்கை இணைப்பு!



உள்ளே -
சிறப்புக் கட்டுரை

82

டிச.' 87

80 காசு

# சுட்டி

மாத இதழ்

FREE E - BOOKS . www.thamizham.net.,

❋ தமிழீழம் எச்சரிக்காகம் (1-00)- பிரபாகரன் பேட்டி—தமிழீழ விடுதலைப் புலிகள் பிரச்சார வெளியீட்டு காரியம்—முகவரி குறிப்பிடப் படவில்லை.

**கேள்வி:** உங்கள் நண்பன், தத்துவாசிரியன், வழிகாட்டி யார்?

**பிரபாகரன்:** இயற்கை எனது நண்பன்; வாழ்க்கை எனது தத்துவாசிரியன்; வரலாறு எனது வழிகாட்டி.

**கேள்வி:** இந்தியாவின் இராணுவம் தலையிட வேண்டும் என்று நினைக்கிறீர்களா?

**பிரபாகரன்:** எமது சுதந்திரத்தை நாமே போராடி வென்றெடுக்கும் மனோதிடமும், நம்பிக்கையும் உறுதிப்பாடும் எங்களிடம் உண்டு. நாமே போராடி எம்மை விடுவித்துக் கொள்ள வேண்டும்.

❋ மூன்று நாடுகளில் முந்நூறு நாள்கள்—(11-00)-S. சத்திய மூர்த்தி I. A. A. S. புத்தகப் பூங்கா— 29, நல்லண்ண முதலித்தெரு—சென்னை—14.

இந்தியாவைப் பற்றி அதிகம் தெரியவில்லை, வெளிநாட்டவர்களுக்கு, இந்தியா என்றால் டெல்லி என்றும், இந்திராகாந்தி என்றும்தான் தெரிகிறது. அந்நாட்டு ஆங்கிலப் பத்திரிகைகள் இந்தியாவைப் பற்றிச் செய்திகள் வெளியிடு வதே இல்லை. வாரம் ஒருமுறை 2பத்திச் செய்திகள் வரும்.

❋ தந்தை பெரியாரின் சிந்தனைகள் (4—50) பாரதி பதிப்பகம், 108, உஸ்மான் ரோடு, சென்னை—17

ஈ. வெ. ராமசாமி என்கிற நான் திராவிட சமுதாயத்தைத் திருத்தி மானமும் அறிவும் உள்ள சமுதாயமாக ஆக்கும் தொண்டை மேற்போட்டுக் கொள்ள அதே பணியாய் இருப்பவன். எனக்கு யோக்யதை இருக்கிறதோ, இல்லையோ இந்த நாட்டில் அந்தப் பணி செய்ய யாரும் வராததினால் நான் வந்தேன்.

---

# எமக்கு வந்தவை

FREE E - BOOKS , www.thamizham.net.,

## சென்னை நாகேஸ்வரராவ் பூங்கா

போர்டை பார்த்தால் நாகேஸ்வரராவ் பந்துலு பூங்கா என்றிருந்தது. நாகேஸ்வரன் பூங்கா என்றிருந்தால் என்ன? முக்கால் நூற்றாண்டு வயதைக் கடந்த ஒருவர் பெஞ்சில் உட்கார்ந்திருந்தார். அவரிடம் பூங்கா பற்றி கேட்டபோது,

''லஸ்ஸில் உள்ள அமர்தாஞ்சன் கம்பெனி முதலாளிக்கு ஒரு தலைவலி இருந்தது. இந்த பார்க்கதான் அது குப்பையும் கூளமுமாக இருந்த இடத்தை ஒரு தொகைக்கு கார்ப்ரேசனிடம் விற்றுவிட்டார். இந்த பூங்கா அவர் பெயரிலேயே உள்ளது ......''

இங்கு பல விளக்குகள் எரியவில்லை. ஒரு கும்பல் ஓர் ஓரமாக அமர்ந்து கஞ்சா அடித்துக் கொண்டிருந்தது இன்னொரு இருட்டான பகுதியில் ஒருவன் பீர்பாட்டிலை உறுஞ்சிக் கொண்டிருந்தான்.

## நேர்முக வர்ணனை

''இங்கு குடிக்கலாமா?''

''என்ன செய்யறது? இங்கு பக்கத்தில் பார் கிடையாது. வெற்றிலை பாக்குக் கடையில் க்ளாஸில் ஊத்திக் கொடுப்பாங்க. ஆனா இது தான் பாது காப்பான இடம்.... ...''

அங்கு பராமரித்து கொண்டிருந்த ஒருவர் அலுத்துக்கொண்டார்;

''இங்க பெரும்பாலும் ஸ்கூல் பிள்ளைங்கத் தான் க்ளாஸை கட்டடிச்சுட்டு வருதுங்க சின்ன சின்ன பிள்ளைகள் எல்லாம் சிகரெட் குடிக்குதுங்க. இந்தப் பூங்கா கெட்டுப் போயிடுச்சுங்க........''

''வலது கோடியில் ஒரு கும்பல் கலாட்டா பண்ணிக்கிட்டிருக்கே என்ன........?''

''ரஜினி ரசிகர் மன்ற கூட்டம் போட்டிருக்காங்க. அடுத்தப் படத்துக்கு போஸ்டர் ஒட்டுவது, தோரணம் கட்டுவது பற்றி இங்கு தான் டிஸ்கஷன் பண்ணுவாங்க........''

—ஸை. ஜெ. சூர்யா

FREE E - BOOKS , www.thamizham.net.,

# கார்கள் குறையவில்லை

கார்கள் விலை கடுமையாக ஏறி விட்டது. இதனால் பணக்காரர்கள் கார் வாங்குவது மிகுதியாகியுள்ளதே தவிர குறையவில்லை. மார்ச், 1985 இல் எடுத்த கணக்கெடுப்பின்படி பம்பாயில் 1,68,777 கார்கள் ஓடின. இப்போது மாருதி காரின் வரவிற்குப்பின் கார்களின் எண்ணிக்கை இன்னும் கூடியுள்ளதாகச் சொல்லப்படுகிறது. கார்களின் பராமரிப்புச் செலவும் 25% அதிகரித்து உள்ளது. ஒரு கிலோ மீட்டர் தூரம் பயணம் செய்ய கார்களுக்கு பம்பாயில் செலவு கீழ்க்கண்டவாறு அமைகிறது.

| | | |
|---|---|---|
| மாருதி | — | ரூ 2.85 |
| பியட் பிரீமியர் பத்மினி | — | ரூ 3.37 |
| அம்பாசிடர் | — | ரூ 3 82 |
| பிரீமியர் 118 NE | — | ரூ 3.96 |
| கண்டசா கிளாசிக் | — | ரூ 4.85 |

பணக்காரர்கள் நினைத்தபடி கார் வாங்குவதும், சுற்றுவதும் இவ்வளவு விலை உயர்விலும் மிகுந்தே வருகிறது. பணக்காரர்கள் மேலும் மேலும் நம் நாட்டில் கொழிப்பதையே இப்போக்கு மெய்ப்பிக்கிறது.

— இ. சு.


## வேல் டைப்பௌண்டரி

- புதிய வகை 2 வண்ண அச்செழுத்துக்கள்
- எல்லா மொழி அச்செழுத்துக்கள்
- எல்லாவித அச்சக உபகரணங்கள்
- போஸ்டர் எழுத்துக்கள்

38, குட்டி தெரு, பெருமாள் பேட்டை, சென்னை-7 தொ. பேசி. 27087


FREE E - BOOKS , www.thamizham.net.,

? கலை மதிப்பீடுகள் பற்றி

அபார அழகி — எனவே பரத நாட்டியம் பிரமாதம். தூய்மையான பாஷை — ஆகவே அற்புதமான இலக்கியம். இதன்கண் தமிழ்ப் பண்பாடு அடக்கம் — மிகச் சிறந்த காவியம். சிறந்த கருத்து — ஆகவே சிறந்த கதை; டபிள்எம்மே பி.எச்.டி. எழுதியது — எனவே நாவல் எப்படி சாதாரணமாக இருக்க முடியும்? சீன், அலங்காரம், தந்திரக் காட்சிகள், காட்சி ஜோடனை, ஹெலிகாப்டர் பதினாறடி சவுக்கத்துக்குள் சுற்றிச் சுழல்வது, விந்தையிலும் விந்தை — ஆகவே நாடகம் அபாரம். வார்த்தை பிரவாஹமெடுத்து வருகிறது — சொற்பொழிவு அற்புதம். பாடகர் அத்வைத சித்தாந்தத்தை விளக்குவதில் நிபுணர் — சங்கீதம் உயர்ந்த சங்கீதம். அகில உலக அறிஞர் — சிறுகதை உருவம் கை வந்து விட்டதில் ஆச்சர்யமில்லை. முப்பதாயிரம் பிரதிகள் விற்பனை, பதினொரு பாஷைகளில் மொழி பெயர்ப்பு — மட்டமானதை மக்கள் மன்றம் ஏற்றுக் கொள்ளுமா என்ன? ...இத்யாதி.

இது ஒரு பக்கம். மற்றொரு பக்கம் கலைகளில், இலக்கியத்தில் கண்ட கண்ட இடமெல்லாம் சர்வ சமரசவாதிகள்.

## சுந்தர ராமசாமி

? விமர்சகன் எதற்கு ஊழியம் செய்ய வேண்டும்?

மனசாட்சிக்கு இலக்கியத் துறையில் ஒருவன் தனக்கு உண்மை என்று பட்டு விட்டதைச் சொல்ல முற்படுகிறபோது அந்த கருத்தோடு மோதுபவர்கள் மாறுபட்ட கோணங்களால் வேறுபட்ட முடிவுகளை வந்தடையலாம். தவிர்க்க முடியாததும், தவிர்க்கக் கூடாததுமான காரியம் இது. உண்மை விமர்சகன் தன் மனசாட்சிக்கு ஊழியம் செய்ய வேண்டும். இரண்டு எஜமானர்களுக்கு ஊழியம் செய்ய முடியாது என்பதும் அவனுக்குத் தெரிந்திருக்கும்.

FREE E - BOOKS , www.thamizham.net.,

# கைக்குத்தல் அரிசி ஏன் நல்லது?

தீட்டிய வெள்ளை அரிசி பார்க்கவும், சுவைக்கவும் நன்றாக இருக்கலாம். ஆனால் எந்திரத்தில் தீட்டப்படும் போது அரிசியின் சத்துப்பகுதிகள் களையப்படுகின்றன. நம் நாட்டில் அரிசி உண்ணும் பலருக்கு, வைட்டமின் பி1, பி2 பற்றாக்குறை உள்ளதற்குக் காரணமே அவர்கள் தீட்டிய அரிசியைப் பயன்படுத்துவதாகும். இந்த தீட்டிய அரிசியை உண்பதை நிறுத்தி விட்டுக் கைக்குத்தல் அரிசிக்கு நாம் மாறினால், வைட்டமின் பி பற்றாக் குறையால் ஏற்படும் அனைத்து நோய்களையும் உடனடியாக நீக்கலாம். வீணாக மருத்துவரைப் பார்த்தும், வைட்டமின் மாத்திரைகளை விழுங்கியும் ஏற்படும் பணவிரயமும், மனச்சங்கடமும் தேவையில்லை.

உணவுத்துறை மருத்துவ அறிஞர்கள், 100 கிராம் கைக்குத்தல் அரிசியில் தீட்டிய அரிசியை விட எவ்வளவு மிகுந்த மூலச்சத்துக்கள் உள்ளன என்பதைக் கீழ்க்கண்டவாறு கணிந்துள்ளனர் :

FREE E - BOOKS , www.thamizham.net.,

| | மகனீசியம் (மி.கி) | மாங்கனீசு (மி.கி) | துத்தநாகம் (மி.கி) | கோபால்ட் (யு.கி.எம்) | செம்பு (யு.கி.எம்) | செலீனியம் (யு.கி.எம்) | ஐயோடின் (யு.கி.எம்) | பி 6 (மி.கி) | பான்டோதனிக் அமிலம் (மி.கி) | போலிக் அமிலம் (யு.கி.எம்) |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| கைக்குத்தல் அரிசி | 52 | 1.5 | 1.9 | 4.2 | 360 | 38.8 | 2.2 | .62 | 1.5 | 20.0 |
| தீட்டிய அரிசி | 14 | 0.9 | 1.5 | 0.9 | 230 | 31.8 | 2.00 | .11 | 0.22 | 3.6 |

இதனைத் தவிர தீட்டிய அரிசியைப் படுத்தும் போது ஏற்படும் பிற இழப்புகள் :

வைட்டமின் பி1 — 65%, பி2 — 40%, சுண்ணாம்பு — 25%, இரும்பு — 50%, புரதம் — 20%, நார்ப்பொருள் — 60%

அது சரி கைக்குத்தல் அரிசியை நாம் இக்காலத்தில் பெறுவது சாத்தியமா? சாத்தியமே காதி கிராமோத்திய பவன் நடத்தும் கடைகள் அனைத்திலும் கைக்குத்தல் அரிசி தாராளமாகக் கிடைக்கிறது. வாங்கிப் பயனடையலாமே.

— சித்தன்!

FREE E - BOOKS , www.thamizham.net.,

# மீண்டும் சுயமரியாதை இயக்கம்

தமிழர், தம் மொழியாலோ இனத்தாலோ எவனுக்கும் தாழ்ந்தவன் இல்லை. யாருக்கும் அடிபணிய வேண்டியதில்லை என்ற கருத்தை, கருவிலேயே உருவாக்கும் 'சுய மரியாதை' இயக்கங்கள் மீண்டும் பல்குதல் வேண்டும். இதன் மூலம்தான் 'சாதனை' சமூகத்தை உருவாக்க முடியும்.

தன் நம்பிக்கை வேர் கொள்ள, மொழிதான் முதற்படி. தமிழில் அனைத்தையும் தொடக்கப் பள்ளி முதல் பல்கலைக் கழகக் கல்வி வரை தமிழ் வழியேதான் பாடங்களைப் பயிற்ற வேண்டும். தமிழ் வழி படித்தோருக்குத்தான் தமிழ்நாட்டில் வேலை என்ற நிலையை உருவாக்க வேண்டும். ஆட்சி, நீதி மன்றம், கோயில் முதலான அனைத்து நிலையிலும் தாய்மொழி தமிழையே அரங்கேற்ற வேண்டும். இதனால், தான் அறிந்த மொழியால் எதுவும் ஆகும் என்ற மனப்பான்மை வளரும். பிறமொழி வழி நேரும் தாழ்வு மனப்பான்மை, அயல்மொழி பண்பாடு, நாகரிக மோகம் முதலாயின விடைபெறும். தன்னம்பிக்கை உரம் பெறும்.

சப்பானில், சீனாவில், செருமானியில் வளர்க்கப்படுவது போன்ற, மொழி தேசிய உணர்வு வளர்க்கப்படின், தனிமானம் குறைந்து இனமானம் பெருகும். பெருகவே கூட்டுணர்ச்சி (TEAM SPRIT) வளரும். தனி நலம் குன்றும். பிறர் நல உணர்வு பெருகும். எனவே அடுத்தவனைப் பற்றிக் கவலைப் படும், கவனங் கொள்ளும் சமூக விழிப்புணர்வு (Social Awanerens) உற்றங்கொள்ளும்.

தற்போதுள்ள அரசியல் சாசனம், தனிமனிதச் சுயநலத்தையும், பிறமனிதனைச் சுரண்டும் போட்டி உணர்வையும், பண நோக்கத்தை யும், வட்டார மொழி ஆதிக்கத்தையும் ஏற்றத் தாழ்வை வளர்க்கும் முதளாளித்துவ சாசனமாகும். இதனை முற்றாக மாற்ற வேண்டும்.

க. ப. அறவாணன்

FREE E - BOOKS , www.thamizham.net.,

# நன்றி, மீண்டும் வராதீர்!

ஏன்தான் இவர்களுக்குப் பள்ளி விடுமுறை விடுகிறார்களோ! — இப்படிப் பலர் அங்கலாய்க்கக் காரணமானவர்கள் நம் பிரதமரின் குழந்தைகள் ராகுலும், பிரியங்காவும்தான்.

ராகுல், பிரியங்காவுக்கு லீவு என்றால் முக்கியமாக மெய்க்காப்பாளர்கள், விமான நிலைய அதிகாரிகள் ஓய்வு என்பதையே மறந்து விட வேண்டியது தான்.

அண்மையில் ராகுலும், பிரியங்காவும் தமது நண்பர்கள் நால்வருடன் லட்சத் தீவு களில் ஒரு வாரம் விடுமுறையைக் கழிக்க முடிவு செய்தனர். உடனடியாக மெய்க் காப்பாளர்கள் பாதுகாப்பு வளையம் அமைக்க, இந்திய கடற்படைக்குச் சொந்தமான ஹெலிகாப்டரில் ராகுல், பிரியங்கா குழு லட்சத்தீவுகளில் இறங்கியது. அந்த வினாடி முதல் விமான நிலைய அதிகாரிகளும், ஏனைய அதிகாரிகளும் லட்சத்தீவுகளுக்கு சுற்றுப்பயணி கள் வராமல் தடுக்க 24 மணி நேரமும் விழிப்புடன் செயல்பட வேண்டியதாயிற்று.

அந்த ஒரு வார காலத்தில் சுற்றுலாத் துறைக்கு ஏகப்பட்ட நஷ்டம்.

ராகுல், பிரியங்கா குழு டெல்லி திரும்புகிறது என்ற செய்தி கேட்டவுடன் அத் தீவு மக்கள் 'அப்பாடா' என்று நிம்மதிப் பெருமூச்சு விட்டனர். சுற்றுலா பயணிகளின் வரவை வைத்தே பிழைப்பு நடத்தி வரும் இத் தீவு மக்கள் 'உங்கள் வருகை எங்களுக்கு உவகையன்று' என்று மனதிற்குள்தான் கூறினர்.

ஆதாரம் : சண்டே — நிலா

---

'சுட்டி' வருட சந்தா ரூ. 10-00
ஆயுள் சந்தா ரூ. 150-00
FREE E - BOOKS , www.thamizham.net.

# மருத்துவ வேட்டை

கி. பி. 2000-ல் இந்தியாவிலுள்ள எல்லா மக்களுக்கும் மருத்துவ வசதி அளிக்கப்பட்டு விடும். இது இன்றைய அரசின் வாக்குறுதி. ஆனால் இன்று 5,50,000 கிராமங்களில் வாழும் 80% மக்களுக்கு இன்னமும் அடிப்படை மருத்துவ வசதி கூட அளிக்கப்படவில்லை.

இந்நிலையில் நோய் இன்னதென்று கண்டு அறிய உதவும் அதிநவீன கருவிகளை இறக்குமதிசெய்து தனியார் மருத்துவமனைகள் மூலம் வளமான வியாபாரம் கொழித்து வருகிறது. 1982-83 ல் ராஜீவ் அரசு அளித்த இறக்குமதி லைசென்சு சலுகைகளே இதற்குமுக்கிய காரணம்.

மராட்டியம், தமிழ்நாடு ஆகிய மாநிலங்களைத் தவிர பிற மாநில அரசுகள் கோடிக்கணக்கில் பணம் செலவழித்து இத்தகைய அதிநவீன கருவிகளை வாங்குவதை விட பெருவாரியான கிராமங்களில் மருத்துவ வசதிகளைப் பெருக்குவதிலேயே அதிக ஆர்வம் காட்டுகின்றன.

போட்ட முதலுக்கு குறைந்த காலத்தில் பெருமளவு லாபம் தரக்கூடிய இந்த மருத்துவக் கருவிகள் குறிப்பாக C T ஸ்கேனர், சிறுநீரகக் கல் அகற்றும் கருவி, காந்த ஒலி அலைகள் மூலம் உடலைப் பரிசோதிக்கும் எம். ஆர். ஐ. எனும் கருவி ஆகியவற்றை உற்பத்தி செய்வதில் பணமுதலைகள் மிகுந்த ஆர்வம்காட்டுகின்றன.

ஒரு முறை T ஸ்கேனர் மூலம் சோதிக்க செலவு ரூ 1000 முதல் ரூ 3000 வரை, எம்.ஆர்.ஐ கருவி மூலம் பரிசோதிக்க குறைந்தது ரூ 1500. சிறுநீரகக்கல் எடுக்கும் கருவிக்கு கல் ஒன்றுக்கு ரூ 15,000. லேசர் கதிர் மூலம் ஒரு முறை கண் சிகிச்சை அளிக்க ரூ 200.

இலட்சக்கணக்கில் லஞ்சம் கொடுத்து மருத்துவக் கல்லூரியில் சேர்ந்து வெளியாகும் நம் டாக்டர்களிடமிருந்து சேவையையா எதிர் பார்க்க முடியும்?

(ஆதாரம்: சண்டே) — நிலா

FREE E - BOOKS , www.thamizham.net.,

## தடை செய்யப்பட்ட

# தேநீர்க்கடை இதழ்கள்

உலகத்தின் முதல் வார இதழை 12 அச்சகத்தார் சேர்ந்து 1621 இல் இங்கிலாந்தில் தொடங்கினர். இதன் பெயர் "வெளிநாடுகளில் இருந்து வாரச் செய்தி" இதன் ஆசிரியர் நதானியல் பாட்டர்.

தேநீர் கடைக்கு வரும் உள்ளூர் மக்களும், வெளியூர் பயணிகளுமே இவ்விதழின் செய்தியாளர்கள். ஊர் வம்புகளும், அரண்மனை விவகாரங்களும் இங்கு தாராளமாக அலசப்பட்டன. 1675 இல் இரண்டாவது சார்லசு மன்னன் தேநீர் கடைகளுக்கே இதனால் தடை விதித்தான். நம் தேநீர் கடைகளிலும், முடி வெட்டும் நிலையங்களிலும் "இங்கே அரசியல் பேசாதீர்கள்" என்று அறிவிப்பு செய்வது போல இது அமைந்தது. இதற்கு அரசன் சொன்ன காரணம் : "தேநீர்க் கடைகள் அரசனின் பெயரைக் கெடுக்கின்றன. அரசரைக் கவிழ்க்க அங்கே சதி நடக்கிறது."

தொடக்க நாட்களிலிருந்தே ஆளுவோர் இதழ்களை ஒடுக்கத் தொடங்கினர். "இராபின்சன் குருசோ" என்ற புகழ்பெற்ற பெருங்கதையை எழுதிய டேனியல் டிபோ இதழ் உரிமைக்காகப் போராடியதால் கழுவில் ஏற்றப்பட்டார்.

அமெரிக்காவில் "பொது நிகழ்ச்சிகள்" என்ற முதல் இதழ் 1690 இல் பெஞ்சமன் ஆரிசு என்பவரால் தொடங்கப்பட்டது. இவர் 4 பக்க தாளில் 3 பக்கம் அச்சடித்து, நான்காவது தாளில் உங்களுக்கு கிடைக்கும் செய்திகளை இதில் எழுதிக்கொள்ளுங்கள் என்று குறுப்பிட்டிருந்தார். தேநீர் கடைகளில் திரட்டிய செய்திகளை, தேநீர் கடை போன்ற இடங்களில் சுவர் இதழாக ஒட்டி வைத்தார். முதல் இதழையே அரசு தடை செய்தது. "பிரான்சு நாட்டில் மன்னனுக்கு எதிராக மகன் கலகம். மகனைக் கண்ட மன்னன் அச்சம்" என்ற செய்தியை வெளியிட்டதே காரணம்.

— இ. சு

FREE E - BOOKS , www.thamizham.net.,

சிறீலங்கா ஜனராஜ்யா என்று அதிகாரப்பூர்வமாக இன்று அழைக்கப்படும் தென்னிலங்கைத்தீவு காலந்தோறும் அந்நிய படையெடுப்புகளுக்கும் சுரண்டலுக்கும் இரையாகி வந்துள்ளது. நேரடியாகவோ, மறைமுகமாகவோ பிற தேசங்களின் சுரண்டல்கள், அச்சுறுத்தல்கள் இவற்றிலிருந்து தன்னைப் பாதுகாக்க முடியாமைக்கு இதன் பூகோள பலவீனமே காரணம்.

தமிழர்கள் என்றாவது ஒருநாள் தமிழ் ஈழம் பெறுவதில் வெற்றி பெறலாம். அப்போதாவது அவர்கள் நிம்மதியாக இருப்பதற்கு உத்தரவாதம் உண்டா? ஒரு பக்கம் சிங்களர்களுடன் எல்லைத்தகராறு; மறு பக்கம் தங்கள் பொருளாதாரத்தைச் சீர் செய்ய ஏதாவது ஒருபெரிய நாட்டைச் சார்ந்து இயங்கும் நிலை—இவையிரண்டும் தவிர்க்க முடியாதவை. இதனால் ஏற்படும்

## ஈழப்பிரச்சனைக்கு தீர்வு:

விட்டால், இலங்கையின் பூகோள பலவீனம் அற்று வீழும். வெகு தூரத்தில் உள்ள அந்தமானும், இலட்சத்தீவும் இந்தியாவுடன் இணைந்திருக்கும் போது கூப்பிடு தூரத்து இலங்கை இணைவது ஏன் சாத்தியமில்லை?

மொழி, இனம், பண்பாடு, பழக்க வழக்கங்கள் போன்ற அனைத்திலும் இம்மக்கள் இந்தியாவுடன் வேறுபட்டவர்கள் அல்லர். சிங்களர்கள் பீகாரிலிருந்தும், ஒரிசாவிலிருந்தும் வந்தவர்களே. பீகார் பகுதியைச் சேர்ந்தவனாகிய இராமன், இத்தீவில் இராவணனை வென்ற பின் தன் பகுதி மக்களை இங்கு குடியேற்றியிருக்கும் சாத்தியமும் உண்டு. இங்குள்ள பௌத்த, இந்து மதங்கள், இந்தியாவின் மதங்களே.

விடுதலைப் போராட்டத்தின் போது இலங்கை தமிழர்களும், சிங்களர்களும்

FREE E - BOOKS , www.thamizham.net.,

விளைவுகள் முந்தைய நிலையைவிட மோசமாகவும் இருக்கலாம்.

இலங்கையின் அத்தனை உள்நாட்டு அயல்நாட்டு பிரச்சனைகளுக்கும் ஒரே நிலையான தீர்வு இலங்கை இந்தியாவுடன் இணைவது மட்டும் தான். தமிழ் ஈழம் தனி மாநிலமாகவோ அல்லது தமிழ்நாட்டுடன் இணைந்தோ இருக்கலாம். சிங்களம் இந்தியாவின் இன்னொரு மாநிலமாக இணையலாம். இவர்கள் அனைவரும் இந்திய குடியுரிமைப் பெற்ற நிலையில் சிங்களர்கள் தமிழர்களை ஒடுக்க வழியே இல்லை. இத்தீவில் பின்தங்கியோர் யாராக இருந்தாலும் நியாயமான தனிச் சலுகைகள் கிடைக்க வழி செய்ய வேண்டும்.

இந்திய எல்லையிலிருந்து வெறும் 22 மைல்கள் கடல் பிரிப்பதாலேயே இலங்கை தனித்து நிற்கிறது. இதனை அகலமான பாலத்தின் மூலம் இணைத்து இந்தியாவுடன் சேர்ந்தே போராடினர். சில சுயலாபங்களுக்காகவே ஆங்கிலேயர்கள் இந்தியாவுடன் இலங்கையை இணைத்து சுதந்திரம் வழங்கவில்லை. இந்தியாவிற்குள் தன் ஆட்சி செலுத்திய சில அரசுகளை, பட்டேல் இந்திய ஒன்றியத்தில் முயன்று சேர்த்தார். விடுதலைப் போராட்ட தலைமை வட இந்தியர்களிடம் இருந்ததால், தென் கோடியில் இருந்த இலங்கையைப்பற்றி அவர்கள் கவலைப்படவில்லை. தமிழர் தலைவர்கள் யாரும் அன்று முனைந்திருந்தால், இலங்கையை நாம் இணைத்திருக்கலாம். பாரதி கனவு கண்ட ஒன்றுபட்ட இந்தியாவில் இலங்கையும் அடங்கும். 'சிங்களத் தீவினுக்கோர் பாலம் அமைப்போம்' என்று அவர் பாடியது இந்த இணைப்பில் கடலால் தடை நேரக் கூடாதுஎன்பதற்காகத்தான்.

இந்த இணைப்பால் தமிழ்இனத்திற்கு ஏராளமான நன்மைகள் உண்டு. இந்தியா

FREE .E - BOOKS , www.thamizham.net.,

வில் தமிழர்களின் எண்ணிக்கை கூடும், தமிழர்க்குரல் உரக்கக்கேட்கும். தமிழகத்தின் எல்லை விரியும் போது, கிட்டும் அனைத்தும் பயன்படும் எண்ணத்தக்கது எனவே தமிழ் இனப்பற்றுடையோர் இத்தீர்வை மறுப்பது மடமை. தமிழன் சிங்களர்களுக்கும், வல்லரசுகளுக்கும் அடிமைப்படுவதை விட சகல உரிமைகளும் படைத்த இந்தியக் குடிமகனாக வாழ்வது புத்திசாலித்தனமாகும். தன்மானமுடையதாகும் அகதிகள் இல்லை அகால மரணமும் இல்லை.

உலகில் இப்படி நலன் கருதி இணைந்த தேசங்கள் உண்டா? நிறைய உண்டு. பசிபிக் கடலில் உள்ள ஹாவாய்த்தீவு, அமெரிக்க ஐக்கிய நாடுகளுடன், பெரு மக்களின் விருப்பப்படி அண்மையில் இணைந்தது. மத்திய ஆசியவில் உள்ள லாட்வியா, லித்வேனியா, எஸ்தோனியா போன்ற சில சிறு தனி நாடுகள் சோவியத் குடியரசுடன் ஒன்றுபட்டால் உண்டு வாழ்வு என்று சேர்ந்து கொண்டன. பெளத்தத்தைத் தேசிய சமயமாகக் கொண்ட சிக்கிம், இந்தியாவுடன் 1975-இல் இணைந்தது. மங்கோலியச் சார்புடைய சிக்கிம் மக்களை விட, இலங்கை மக்கள் இந்திய கலாச்சாரத்திற்கு ஒன்றும் நெருக்கம் குறைந்தவர்கள் இல்லை. சிக்கிம் மாதிரி இலங்கை மதச் சார்புள்ள தேசமும் அல்ல.

ஈழத்தமிழர்களின் இன்னல் தீர்க்க மட்டுமன்றி, இந்துமாக் கடலில் அமைதி நிலவவும் இவ்விணைப்பு உதவும். சில சுயநலமான அரசியல் வாதிகளுக்கு இவ்விணைப்பு கசக்கும். ஆனால் இலங்கை மக்களுக்கு இது நிலையான நன்மையே பயக்கும்.

— எழில்.

---

தொடர்பு முகவரி:
AP 638, H பிளாக், அண்ணா நகர்,
சென்னை—600040.

FREE E - BOOKS , www.thamizham.net.,

# காதைக் கிழிக்கும் ஜால்ரா சத்தங்கள்

"தலைமை வழிபாடு" நம்மைப் பீடித்திருக்கும் தொழுநோய்-இதற்கு முழுஅத்தாட்சியாக அமைந்துள்ளது எம். ஜி ஆர். வருகையின் போது காணப்பட்ட வரவேற்பு வசனங்கள்.

வீதிகளிலும் பேருந்துகளிலும் ஒட்டப்பட்ட சுவரொட்டிகள் போதாதென்று நாளிதழ்களிலும் துதிப்பாடல்கள் காதைக்கிழித்தன. மாதிரிக்கு 31—10—87 நாளிதழில் காணப்பட்ட சில வசனங்களும் சில விசனங்களும்:-

"தத்துவ வசந்தமே! தமிழக முதல்வனே! வைரங்களைப் போன்ற வரலாற்று நாயகன் புருவங்கள் போன்று புதுயுகத் தலைவன், (பொருள் கேட்காதீர்கள். 'த'வுக்குத்'த' 'வை'க்கு'வ, வந்திருக்கிறதா என்று மோனையைப் பாருங்கள்.)

"ருஷ்ய நாட்டின் தலைவனாம் லெனின் கிரெம்ளின் மாளிகையில் இருந்தாலும், அவன் நினைவு எல்லாம் பனி பெய்யும் சைபீரியா தீவில் வாழும் மக்களைப் பற்றித்தான் இருந்தது. என்பார்கள் தமிழக முதல்வர் அமெரிக்க நாட்டில் இருந்தாலும் அவர் எண்ணமல்லாம் தமிழ் நாட்டில் மக்களைப் பற்றித்தான் இருந்தது"

(சைபீரியா ஒரு தீவா? இது என்ன புது பூகோளம்?)

"வற்றியுள்ள தமிழ் நதிக்கோ வான்மழை நீ. வறள்கின்ற தமிழ்ப் பயிர்க்கோ கார் முகில் நீ வாடும் தமிழ் நெஞ்சுக்கோ வசந்தம் நீ வான் மழையாய் வருக! கார் முகிலாய் வருக! வசந்தமாய் வருக!" (வான் மழை சரி கார் முகில் சரி வசந்தம் என்று ஏன் சொன்னார்கள்? வான் மழையாய் வருக! என்று சொன்ன பிறகு 'வசந்தமாய் வருக' என்பது என்ன பேத்தல்?)

தலைமை வழிபாடு ஜால்ராத்தனம் என்றும் கூறலாம். தலைக் கேறினால், எப்படியெல்லாம் புத்தி தடுமாறும் என்பதற்கு இதைவிட வேறு சாட்சி வேண்டுமா?

—ராமன்

FREE E - BOOKS , www.thamizham.net.,

# இந்தியர்களுக்கு மட்டும் கிரிக்கெட் பைத்தியம் ஏன்?

பூமியுருண்டையில் விளையாடப்படும் எந்த விளையாட்டையும் விட இங்கு கிரிக்கெட் காதலிக்கப்படுவதற்குக் காரணம் என்ன? அகில உலக ஆட்டமாக, ஒலிம்பிக் போட்டியில் அங்கீகாரம் கூடப் பெறாத இந்த ஒரு விளையாட்டில் இந்தியர்கள் மட்டும் வெறித்தனமாக ஈடுபாடு செலுத்துவது ஏன்?

இந்தியாவின் வரலாற்று, சமூக, உளவியல், சமயப் போக்கிற்கு கிரிக்கெட் என்ற விளையாட்டு ரெடிமேட் சட்டை போலப் பொருந்துவதே இதற்குக் காரணம்.

எந்த விளையாட்டிலும் இல்லாதபடி, நேரப்பஞ்சம் நிறைந்த இந்த அவசர யுகத்தில் கிரிக்கெட் 5 நாட்கள் விளையாடப்படுகிறது. விளையாடியும் முடிவில் யாருக்கும் வெற்றியோ தோல்வியோ இல்லாமல் போகலாம். ''கடமையைச் செய்; பயனை எதிர்பார்க்காதே'' என்ற கீதையின் போதனை நம் சமயக் கலாச்சாரத்தில் ஊறிப்போயிருப்பதால், இந்நிலை ஏற்கப்படுகிறது.

இந்தியர்கள் பாம்பாட்டியை, கண்கட்டி வித்தையை நடுத்தெருவில் கூட்டங்கூடி மணிக்கணக்கில் ரசிப்பவர்கள். முடிவு தெரியாத விஷயங்களில் மோகம் செலுத்தும் இப்போக்கு கிரிக்கெட்டிற்கும் பொருந்துகிறது. நமக்குப் பிடித்தமான கூட்டங் கூடுவது, மகிழ்வுலா போவது இவற்றிற்கெல்லாம் கிரிக்கெட் ஸ்டேடியம் ஈடுகொடுக்கிறது.

நேர உணர்வின்மை, மந்தப்போக்கு, தலைமை வழிபாடு, கேளிக்கையில் இடைவிடா ஈடுபாடு போன்ற நம் பிற்போக்குத்தனங்கள் அனைத்திற்கும் கிரிக்கெட் பொருந்துகிறது.

எல்லாவற்றிற்கும் மேலாக, சுமார் 2,000 ஆண்டுகள் அடிமைச் சேற்றில் ஊறித் திளைத்த நமக்கு கடைசி அடிமையாக இருந்த ஆங்கிலேயர்க்கு இன்றும் விசுவாசம் காட்டும் அடிமை உணர்வு நீங்கவில்லை. பிரிட்டனிலும், பிரிட்டனுக்கு அடிமையாக இருந்த நாடுகள் தவிர, உலகின் வேறு எந்த தேசத்திலும் கிரிக்கெட் விளையாடப்படுவதில்லை.

— **உலகப்பன்**

FREE E - BOOKS , www.thamizhani.net.,

# வாசகர் எதிரொலி

இலங்கைத் தமிழர்களை அழிக்க ராஜீவை ஜெயவர்த்தனா எப்படி பயன்படுத்துகிறார் என்பதை அட்டைப்படக் கார்டூன் தத்ரூபமாக விளங்கியது.

— இரா. புவனேந்திரன், திருவொற்றியூர்

---

டி. வி. பார்த்தால் மூளை பாதிக்குமா? கட்டுரையை கட்டிங் செய்து அனைவரிடமும் காண்பித்து வருகிறேன்.

— ராஜேந்தர் பிரியன், திருச்சி-3

---

சினிமாவின் வளர்ச்சி இந்தியாவின் பொருளாதார, பண்பாட்டு வீழ்ச்சிகளுக்குக் காரணமாக அமையும் அவலத்தை 'தலைவர்களின் மூலதனம் சினிமா' படம் பிடித்துக் காண்பித்தது.

— எம். சம்பத், வேலாயுதம் பாளையம்

---

'ஈழம் இன்னொரு வியட்நாம்' கட்டுரை படித்தேன். எந்த போராட்டத்துக்கும் அந்தந்த நாட்டு சூழ்நிலை தன்மையே இருக்கும். இப்படிப்பட்ட சூழ்நிலையில் ஈழம் எப்படி வியட்நாம் ஆகும்?

— எஸ். வி. ஆர். சென்னை-5

---

உலகம் முழுவதும் பரவியுள்ள பிச்சையை ஒழிப்பது கஷ்டம்தான். பின் அட்டைக் கவிதைகள் சுருக்கமாக இருந்தாலும், நறுக்குத் தெரித்தாற் போல இருந்தன.

— எஸ். ஜே. இதயா, மதுரை-20

FREE E - BOOKS , www.thamizham.net.,

# செவிடன் காதில் சங்கு

தபால் துறை போராட்டம் பற்றியும், கிராமப்புற தபால் ஊழியர்களின் நிலை பற்றியும் முன்பே 'சுட்டி'யில் எழுதப்பட்டிருக்கிறது. அந்த போராட்டத்தை முறியடிக்கக் கையாளப்பட்ட அகிம்சா மூர்த்திகளின் தந்திரம் இன்று வெளியாகிவிட்டது. கிராமப்புற தபால் ஊழியர்கள் (EDDA என்றழைக்கப் படும் ஊழியர்கள்) பெற்ற சம்பளம் ரூ 224. போராட்டத்திற்குப் பின் ரூ 345 ஆக உயர்த்தப் பட்டது. ஆனால் மீண்டும் அவர்களுக்கு சம்பளம் அதிகமாக உள்ளது என்று ரூ 100 குறைக்கப்பட்டு விட்டது.

போராட்டத்தின் போது அறிவிக்கப்பட்ட படி 01—01—86 முதல் சம்பளம் உயர்த்திய தாகக் கொடுக்கப்பட்ட 'அரியர்ஸ்' தொகையை 20 மாத தவணையில் பிடிக்கும் படி அறிவிக்கப் பட்டுள்ளது.

கொடுத்த சம்பளத்தை திரும்பக் கேட்கும் நமது அரசாங்கத்தைப் போல் வேறெங்காவது பார்க்க முடியுமா?

மழை, வெயிலில் ஓடி ஆடி உழைத்து ஓய்வு பெறும் போது ரூ 3000 மட்டுமே பெறுகிறார் கள். 'பென்சன்' என்ற பேச்சும் இல்லை. இப்படிப் பட்டவர்களுக்கு உயர்த்திய சம்பளத்தைப் பிடிக்கும் அரசு யாருக்காக செயல்படுகிறது?

சம்பளம் உயர்த்தியதை மட்டும் கொட்டை எழுத்துக்களில் விளம்பரப்படுத்திக் கொள்ளும் அரசு இவர்களுக்காக செவி சாய்க்குமா?

குமுறும் வாசகர்: மறுமலர்ச்சிப் பித்தன்

---

★ சுட்டி வாசகர் இயக்க விண்ணப்பம் பெறாதவர்கள் எழுதுங்கள்.

FREE E - BOOKS , www.thamizham.net.,

# இறந்த தின வாழ்த்துக்கள்

மானேஜர் முகத்தில் கடுமையிருந்தது. சங்கருக்கு தெரிந்து விட்டது: 'லீவு நாளை கிடைக்காது.' பல முறை கெஞ்சிப் பார்த்தான் சங்கர்.

"சார்... நாளை எனது மனைவிக்கு முதல் பிரசவம்"

"இருக்கட்டும். எல்லாம் நன்றாக நடக்கும். நாளை நிச்சயம் அலுவலகத்தில் இருந்தாக வேண்டும்."

அது ஒரு தனியார் நிறுவனம். முதலாளியிடம் நல்ல பெயர் வாங்கியவர் மானேஜர். அவருக்கு எதிராக ஏதேனும் செய்தால் சஸ்பெண்ட். பிறகு புதிதாக பிறக்கப் போகிற குழந்தையோடு நடுத்தெருவுக்கு வர வேண்டியதுதான்...

* * *

டாக்டர்களோடு கலந்தான். மதியம் ஆகி விடுமாம். ஆஸ்பத்திரியிலிருந்து அலுவலகம் செல்ல பஸ் பிடித்தான். நிறைய கூட்டம். இந்த பஸ்ஸை தவறவிட்டால் போய்ச் சேர முடியாது. சங்கர் புட்போர்டில் தொற்றிக் கொண்டான்.

சிறுகதை

திடீரென்று —

ஒரு கும்பல் பஸ்ஸை நோக்கி வந்தது. கூட்டமாக சப்தமிட்டனர். பஸ் நின்றது. கூடியிருந்த கும்பலின் சட்டைகளில் கறுப்புக் கொடி குத்தப்பட்டிருந்தது. பஸ்ஸிலிருந்து கீழிறங்கிய சங்கர் —

"என்ன சார்... என்ன கலவரம்..."

"தலைவர் சதாசிவம் மாரடைப்பால் செத்துட்டாராம். அதான் கடையடைப்பு, பஸ் நிறுத்தம்..."

சதாசிவம் செத்துட்டாரா? சங்கர் அதிர்ச்சியடைந்தான். அவனது அபிமான தலைவனாயிற்றே! வருத்தப்பட நினைத்தான். இப்போது நேரமில்லை மனைவி ஞாபகம் வர, ஆஸ்பத்திரியை நோக்கி ஓடினான்....

நா. தென்னிலவன்.

FREE E - BOOKS , www.thamizham.net.,

# மணமக்கள் தேவை

பத்திரிகைகளில் வெளிவரும் நகைச்சுவைகள் சில சமயங்களில் உப்புச் சப்பில்லாமல் போய் விடுவதுண்டு. அதனை ஈடுகட்டுவதற்குத் தொடங்கப்பட்டிருப்பது போலவே சமீபத்தில் வெளிவரும் 'மணமக்கள் தேவை' விளம்பரங்கள் அமைந்திருக்கின்றன.

இவ்விளம்பரங்களுக்கு உரிய கட்டணம் பெற்ற பிறகும் இதற்கு 'சமூக சேவை' என்ற முத்திரையைத் தங்களுக்குத் தாங்களே பத்திரிகைகள் குத்திக் கொள்ளுகின்றன.

மணமக்கள் தேவைக்கு விளம்பரம் செய்யக் கூடாது என்பதல்ல—அதில் ஒரு ஒழுக்கம், பண்பாடு ஆகியவை பின்பற்றப் பட வேண்டும்.

'செட்டியார் ஜாதியைச் சேர்ந்த (வாணிய செட்டியார் உட்பிரிவு) மத்திய அரசு வேலையில் இருக்கும் நான்கு இலக்கம் சம்பளம் வாங்கும் அழகிய தோற்றம் கொண்ட மணமகனுக்கு இதேஜாதி, இதே உட்பிரிவு உள்ள மணமகள் தேவை. மத்திய, மாநில அரசுகளில் நிரந்தர வேலையில் நான்கு இலக்கம் சம்பளம் வாங்குபவராகவோ, வசதி உள்ள குடும்பத்தைச் சேர்ந்தவராகவோ இருக்க வேண்டும். அழகிய தோற்றமும், இனிய குரலும், பணிவும் கொண்டவராக இருக்க வேண்டும். நல்ல குடும்பத்தைச் சேர்ந்தவர்கள் விண்ணப்பிக்க: P. Box No............சென்னை,—'

ஒரு களிமண் பொம்மையை வாங்கும் போதோ சந்தையில் மாடு பிடிக்கும் போதோ என்னவெல்லாம் கவனிக்கப்படுமோ அவையெல்லாம் ஒரு மணமகனையோ மணமகளையோ தேர்ந்தெடுக்கும் போது கவனிப்பது கடைந்தெடுத்த கழிசடைத்தனம். நாகரிக உலகம் வெட்கித் தலைகுனிய வேண்டிய அநாகரீகம்.

சாதிஒழிப்பு, பெண்ணுரிமை, வரதட்சணை எதிர்ப்பு என்றெல்லாம் முழக்கமிடும் பத்திரிகைகளும் கூட இவ்விளம்பர வியாபாரத்தில் பந்தயக் குதிரைகளாகப் போட்டியிடுவது வருந்தத் தக்கது. —பிருந்தா சாரதி

FREE E - BOOKS , www.thamizham.net.,

## அமரர் சத்திய மூர்த்தி நூற்றாண்டு விழாவும் - திருமயம் நகரப் பிரச்சனையும்

விடுதலைப்போரில் பங்கு கொண்ட தமிழர் சத்திய மூர்த்தியின் நூற்றாண்டு விழாவை அரசு ஆடம்பரமாகக் கொண்டாடி வருகிறது. பயனற்ற ஆடம்பரங்கள் செய்வதில் நம்மவர்களை மிஞ்ச உலகில் யார் இருக்கிறார்கள்!

அமரரான ஒரு மாமனிதரைச் சிறப்பிக்க, ஆக்கப்பூர்வமான வழிகளைச் சிந்திக்கலாமே. வீண் ஆடம்பரங்கள் தவிர்க்கப்படலாமே.

அமரர் சத்திய மூர்த்தியின் பிறந்த ஊர் திருமயம். அங்கு அவருக்கு ஒரு வெண்கலசிலை வைக்க அரசு திட்டமிட்டுள்ளது, நன்று.

திருச்சி-ராமேஸ்வரம் புகை வண்டி வழித்தடத்தில்உள்ள ஊர் திருமயம். இது வரலாற்றுப்பெருமை மிகுந்த இடம். ஊரில் நடுவே கம்பீரமான கோட்டை இன்னமும் வரலாறு பேசிக் கொண்டிருக்கிறது. குடைவரைக் கோயில் உள்ள வைணவத் தலமாக இது விளங்குகிறது. இவை தவிர திருமயம் வட்டத் தலைநகர்- அரசாங்க அலுவலகங்கள், நீதிமன்றம், வங்கிகள் அமைந்த ஊர்.

இச்சிறப்பு மிக்க இவ்வூரில் கடந்த 3 ஆண்டுகளாக இது வரை நின்று வந்த சென்னை, ராமேஸ்வரம் - சென்னை பாசஞ்சர் நிற்பதில்லை. இதனால் இவ்வூரின் பொது மக்களும், ஊருக்கு வருவோரும் பெருந் தொல்லைப் படுகிறார்கள்.

சத்தியமூர்த்தி நூற்றாண்டு விழாவை முன்னிட்டு, அவர் பிறந்த ஊரில், மீண்டும் இந்த ரயிலை நிற்க வைக்கலாமே. பிளாட்பாரத்தை சரிவர அமைத்து ஏற, இறங்க வசதி செய்யலாமே.அவரது சிலையை விட இந்த ஆக்கப் பூர்வமான செயல் அவரை தினம் தினம் மக்களுக்கு நினைவூட்டுமே! செயல் வீரர் சத்திய மூர்த்தி நினைவாக இந்த நற்செயலை செய்வதே அவருக்கு நல்ல நினைவுச் சின்னமாக அமையும்!

— திருமயம் விரும்பி

FREE E - BOOKS , www.thamizham.net.,

**புதிய கண்டுபிடிப்பு**

## கருவிழி போதும், கையெழுத்து வேண்டாம்

எதிர்காலத்தில் வங்கிகளுக்குப் போய் பணம் எடுக்க காசோலையில் கையெழுத்திட வேண்டாம். கருவிழியைக் காண்பித்தால் போதும்.

கருவிழியின் பின்புறமுள்ள சிறிய இரத்தக் குழாய்களின் அமைப்பு ஒவ்வொருவருக்கும் மாறுபடுகிறது. வங்கியில் கணக்கு வைப்போரின் கருவிழியின் பின்புறமுள்ள நரம்புப்படம் கம்ப்யூட்டரில் பதிவு செய்யப் படும். இந்த வாடிக்கையாளர் பணம் கேட்கும் போது, ஒரு குறிப்பிட்ட இடத்தில் அவர் பார்வை பட்டால், அவரது பதிவுப் படத்துடன், அது ஒத்து வந்தால் உடனே பணம் வழங்க கணிப்பொறி ஆணையிடும்.

இறந்துபோனவரின் கருவிழியைப் பயன் படுத்தி ஏமாற்ற நினைத்தால், இரத்தம் உறைந்துள்ள நிலையை உணர்ந்து, கணிப்பொறி பண நிறுத்தம் செய்யும்.

ஜெனோவாவில் அண்மையில் நடந்த கண் காட்சியொன்றில் வைக்கப்பட்டிருந்த இந்தக் கருவி நாளை உலகமெங்கும் பரவக்கூடும்.

— இ.சு.

---

**மாதம் 2,000 வரை சுயமாக சம்பாதியுங்கள்**

எங்கள் பைனான்சிங் கம்பெனிக்கு பிக்ஸட் டெபாஸிட் (FIXED DEPOSIT) சேர்த்துக் கொடுத்து மாத சம்பளத்தோடு மிகக்கவர்ச்சி கரமான கமிஷன் பெறலாம். சென்னையில் உள்ளவர்க்கு மட்டுமே இவ்வாய்ப்பு. முன் அனுபவம் உள்ளவர்களாயின் நன்று.

மலர்ச்சி நிதி — AP 638, அண்ணா நகர், சென்னை-600 040 — Advt.

FREE E - BOOKS , www.thamizham.net.,

? குழந்தைகளைப் பற்றி என்ன கூறுவீர்கள்?

ஆபிரகாம் லிங்கன்: நீங்கள் ஆரம்பித்துள்ளவற்றைத் தொடரப் போகிற நபர் குழந்தை. நீங்கள் அமர்ந்துள்ள பொறுப்பில் அவன் அமரப் போகிறான். முக்கியமானவை என நீங்கள் மதிப்பிட்டுள்ளவற்றை பரிசீலிக்கப் போகிறவன் அவன். உங்களுக்கு இஷ்டமான போக்கை நீங்கள் தேர்ந்தெடுக்கலாம். அது எவ்வாறு மேற்கொள்ளப்படும் என்பது அவனைப் பொருத்தது உங்களது ஆட்சி அதிகாரத்தை அவன் கைப்பற்றிக் கொள்வான். உங்கள் புத்தகங்ளெல்லாம் அவனால் தீர்ப்பிடப்படும். மானிடத்தின் விதி இருப்பது அவன் கைக்குள்.

---

# பதில்கள்

---

? ஒரு நாட்டின் தேசிய இனங்களிடையே சமத்துவம் இல்லாதபோது அங்கு மார்க்சீய வாதிகளின் கடமை என்ன?

வி. ஐ. லெனின்: தேசிய இனங்களின், மொழிகளின் சமத்துவத்திற்காக மார்க்சீய வாதிகள் போராட வேண்டும். எல்லாவித மான சமத்துவமின்மையையும் எதிர்த்துப் போராட வேண்டும். அப்படி போராடாத எவரும் மார்க்சீய வாதி அல்ல; ஜனநாயகவாதி அல்ல; இது சந்தேகத்திற்கு இடமில்லாதது.

? For Private Circulation only என்று போட்டு வரும் பத்திரிகைகள் பற்றி . . .

சுஜாதா: இப்படி வரும் பத்திரிகைகளில் ஒரு சௌகரியம். தேதி கீதி எதுவும் போட வேண்டாம். அவ்வப்போது நண்பர்களிட மிருந்து காசு சேர்ந்தால் அச்சடிக்கலாம். இஷ்டத்திற்கு புதுக்கவிதை இருக்கிறது. இந்தப் பத்திரிகைகள் ஆரம்பித்த உடனேயே வாழ்த்து அனுப்பி விஷய தானமும் ரெடியாகச் செய்யும் ஒரு கோஷ்டியே இருக்கிறது. எங்கேயாவது ஒரு சிறு பத்திரிகை ஆரம்பித்தாலும் உடனே தெரிந்து போய்விடுகிறது. இந்தா புதுக் கவிதை . . . . இந்தா கட்டுரை . . . . இந்தா சிறுகதை . . . . நல்ல ஆர்வமுள்ள கோஷ்டி, இவர்கள் பரவட்டும்.

FREE E - BOOKS , www.thamizham.net.,

சுட்டி பதிவு எண் : TN/MS/(N) 317

# பெண் ஈண்டர்கள்

ரக்ஷாபந்தன் நாளன்று தங்கள் சகோதரர்களின் கையில் கட்டுவதற்காக 'ராக்கி' எடுத்துக்கொண்டு இரு இளம் பெண்கள் சாலையில் சென்று கொண்டிருந்தனர். இரு இளைஞர்கள் அவர்களையே பின் தொடர்ந்து வந்து கொண்டிருந்தனர்.

ரக்ஷா பந்தன் நாளானதால் அந்தப் பெண்களில் ஒருத்தி தங்களைப் பின் தொடர்ந்த இளைஞர்கள் ஒருவனிடம், "உன் கையில் ராக்கி கட்டி உன்னை என் சகோதரனாக ஏற்றுக் கொள்கிறேன்" என்றாள். அவ்விதமே இன்னொரு பெண்ணும் மற்றொரு இளைஞனிடம் கூறினாள். இரு இளைஞர்களும் மறுமொழி பேசாமல் ராக்கிக் கட்டிக் கொண்டனர். மீண்டும் அப்பெண்களைப் பின் தொடர்ந்தனர்.

சிறிது நேரத்திற்குப்பின் ஒருவன் மற்றவனிடம் சத்தமாக, "உன் கையில் ராக்கிக் கட்டியவளை நான் மணந்து கொள்கிறேன். என் கையில் ராக்கி கட்டியவளை நான் மணந்து கொள்கிறாயா?" என்று கேட்டான்.

இது வடநாட்டு நகரொன்றில் நடந்த நிகழ்ச்சி. வளமான மனநிலையைத் தோற்றுவிக்க சரியான கல்வி உருவாகும் வரை, வெறும் சடங்குகளால் மட்டும் மனமாற்றத்தை ஏற்படுத்திவிட முடியுமா?

— நிலா.

ஆசிரியர் : கு. நாராயண பாரதி,
வெளியிடுபவர் : கி. இராமச்சந்திரன்,
அச்சிடுபவர்: எம். எஸ். ரவீந்திரன்,
ரவீந்திரன் பிரஸ், 137 டாக்டர் நடேசன் ரோடு
சென்னை-600005.
முகவரி : 1494, அண்ணா நகர்,
சென்னை-600040

http://www.thamizham.net FREE E - BOOKS (TAMIL) தமிழகம்

FREE E - BOOKS , www.thamizham.net.,